*HUMAN RIGHTS COMMISSION OF SRI LANKA*

2017 மே மாதம் 31 ஆம் திகதி

அதிமேதகு மைத்திரிபால சிரிசேன அவர்கள்,
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி,
ஜனாதிபதிச் செயலகம்,
கொழும்பு 01.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களே,

**சிறுபான்மை மதத்தவர்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள்**

அண்மைக்காலங்களில் மிகவும் தீவிரமடைந்திருக்கும் முஸ்லிம் மக்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுவரும் வன்முறை மற்றும் ஆக்கிரமிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அக்கறை கொள்கிறது.

இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இதனையொத்த செயற்பாடுகள் 2014 ஜுன் மாதம் அளுத்கமையில் வன்முறைகள் தலைதூக்கியதற்குக் காரணமாக அமைந்ததுடன், அதன் காரணமாக உயிர்களுக்கு மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களை ஆணைக்குழு நினைவுபடுத்துகின்றது. அளுத்கமை வன்முறையைத் தூண்டிய மற்றும் வன்முறைக்கு பொறுப்பானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு இன்றுவரை வகைசொல்லும்பொறுப்பான கருத்துமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படாதது ஆணைக்குழுவிற்கு புலனாகிறது.

முஸ்லிம் மக்கள், மற்றும் அவர்களது வணக்கஸ்தலங்கள் வர்த்தகங்களுக்கு எதிராக வன்முறையைத் தூண்டி விடும் நோக்கில் மக்களை ஊக்கப்படுத்தும் வகையில், சமூக வலைத்தளங்கள் மற்றும் சில பிரதான ஊடகங்களின் ஊடாக பிரச்சாரம் செய்யப்பட்டு முஸ்லிம் சமூகத்தை மற்றும் இஸ்லாம் மதத்தை இலக்காகக் கொண்ட வெறுக்கத்தக்க பேச்சுக்களை அவதானித்து ஆணைக்குழு கலக்கமடைகிறது.

மேலும் கண்டிக்கப்படாமல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் மதங்களிற்கெதிரான சகிப்பற்றதன்மை மற்றும் சமீப காலத்தில் கிறிஸ்தவ வழிபாட்டுத்தலங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தொடர் தாக்குதல்கள் தொடர்பாகவும் ஆணைக்குழுவானது அதிமேதகு ஜனாதிபதியாகிய தங்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றோம்.

ஒரு குறித்த இனத்தை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படும் வெறுப்பான மற்றும் வன்முறை போன்ற வெளிப்படுத்தல்கள், 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனச் சட்டம் மற்றும் இலங்கை தண்டனைச்சட்ட கோவை என்பவற்றின் கீழ் குற்றமாகும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வது அத்தியாவசியமாகும். சட்டப்புத்தங்களில் உள்ள சட்டங்களை நடைமுறைப்படுத்தாவிட்டால் அச்செயல் சட்டத்தின் ஆட்சியின் மேல் பாதகமான விளைவை உண்டுபன்னும். அதனால் நாட்டின் சிறந்த நலனைக்கருதி இந்த சட்டங்களை நடைமுறைப்படுத்துவது அத்தியாவசியமாகும்.

தேசிய சட்டங்கள் மற்றும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைக் கடப்பாடுகளிற்கு அமைய வன்முறையை ஊக்கிவிக்கும் மற்றும் ஆதரிக்கின்ற வெறுப்பான பேச்சுக்கள் பரவாது நிறுத்துவதற்கு உரிய காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கும் வன்முறைகளை தடுப்பதற்கும் அரசாங்கத்திற்கு பொறுப்புள்ளது. அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளத் தவறுதலானது நாட்டின் மனித உரிமைகள் செயற்பாடுகள் மீது கறுப்புப் புள்ளியாக இருத்தல் மட்டுமன்றி அதிமேதகு ஜனாதிபதியவர்கள் முக்கியத்துவம் கொடுக்கும் நல்லிணக்கத்தை அடைய பாரிய தடையாகவும் இருக்கும்.

இந்த நிலைமையினைக் கவனத்திற்கொண்டு, முஸ்லிம் மக்கள் மற்றும் ஏனைய சிறுபான்மை மதத்தவர்களை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுவரும் பகைமை மற்றும் வன்முறையைத் தூண்டும் பேச்சுக்களை பிரச்சாரப்படுத்துபவர்கள், ஊக்குவிப்பவர்கள் மற்றும் வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் துரிதமாக எடுக்குமாறு சட்டமும், ஒழுங்கும் சம்பந்தமான அமைச்சுக்கு மற்றும் பொலிஸ் மா அதிபருக்கு ஆணையைப் பிறப்பிக்குமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அதிமேதகு ஜனாதிபதியவர்களை வேண்டிக்கொள்கின்றது.

**தவிசாளர்,**
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.